சுருக்கம்

கலையும் பண்பாடும் – சென்னை, குச்சிப்புடி கலை நிறுவனம் – வெம்பட்டி மார்கழி உட்சவ் 2018 – 25.12.2018 முதல் 31.12.2018 வரை நடைபெற்றது – ரூ.1,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (ப) எண். 59

நாள்: 14–05–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், சித்திரை 31

படிக்கப்பட்டது

கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். 7493 /இ1 / 2018, நாள்: 07.12.2018 மற்றும் 20.03.2019

*****

ஆணை:–

குச்சிப்புடி கலை நிறுவனத்தால் 25.12.2018 முதல் 31.12.2018 வரை நடத்தப்பெற்ற வெம்பட்டி மார்கழி உட்சவ்–2018 விழாவின் தொடக்க நாளான 25.12.2018 அன்று மாலை 5.30 மணியளவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து ஐந்து சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து 25.12.2018 முதல் 31.12.2018 வரை ஒவ்வொரு நாளும் சிறந்த கலைஞர்களின் குச்சிப்புடி, சித்ரநாட்டியம், ஒடிசி, கதக்களி, மோகினியாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளும் மற்றும் 30.12.2018 அன்று பரதநாட்டியக் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

2. சென்னை, குச்சிப்புடி கலை நிறுவனத்தில் 25.12.2018 முதல் 31.12.2018 வரை நடைபெற்ற வெம்பட்டி மார்கழி உட்சவ் – 2018 கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட 14 கலைக் குழுக்களுக்கு ஒரு கலைக்குழுவிற்கு ரூ.25,000/– வீதம் 14 கலைக்குழுக்களுக்கு ரூ.3,50,000/– தொகையினை 2018–2019ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, சென்னை, குச்சிப்புடி கலை நிறுவனத்தால் 25.12.2018 முதல் 31.12.2018 வரை நடத்தப்பெற்ற வெம்பட்டி மார்கழி உட்சவ்–2018 விழாவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கிய கலைக்குழுக்களுக்கு மதிப்பூதியம் வழங்கிய

செலவினங்களுக்காக தமிழக அரசின் சார்பில் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

(த.தொ.கு.2205 00 102 JA 30903)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 18020/நிதி(கல்வி–II)துறை / 2019, நாள் 09.05.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்

<u>நகல்:-</u>
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14/05/19

**பிரிவு அலுவலர்**

14.5.19